செ.கு. எண் : 40

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.1.2012

நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் ஆயுதப் படை வாகனப் பிரிவில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்த திரு. மா. பாண்டியன் சாகச நிகழ்ச்சிகள் நடத்திய போது எதிர்பாராத விதமாக தவறி விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை முதல் நிலை காவலர் திரு. பாண்டியன் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. பாண்டியன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் விபத்தில் காலமான காவலர் திரு. பாண்டியன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்